Toronto Seniors Housing Corporation

## உள்ளடக்கம்

தலைமை நிர்வாக அதிகாரியிடமிருந்து செய்தி .........2
மனிதகுலத்தில் அழகைக் காண்பது ................................4
Community Connect+ புதுப்பிப்பு.............................................7
தொலைதூரத்தில் பிரமாண்டமாக வாழ்ந்த ஒரு வாழ்க்கை..................................................................10
ரொறன்ரோ பொது சுகாதாரத்துடனான ஆரோக்கியமான உணவுப் பட்டறைகளை வாடகைதாரர்கள் அனுபவிக்கிறார்கள். .........................14
உங்கள் சமூகம் பற்றிய ஒரு பார்வை .............................17
சமூக வாழ்க்கை: உடலுக்கும் உள்ளத்திற்கும் நல்லது ....................................................................................19
R-PATH அறிக்கைகள்: மூத்த குடிமக்களுக்கான நீட்டிக்கப்பட்ட மருத்துவ சலுகைகள் .............................22
வரித் தாக்கல்: அது ஏன் முக்கியம்? .................................24
மோசடியிலிருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்ளல்...................................................................27
முக்கியத்துவம் வாய்ந்த நாட்களைக் கொண்டாடுதல் .........................................................30
நிறுவனப் புதுப்பிப்புகள்....................................................31

# தலைமை நிர்வாக அதிகாரியிடமிருந்து செய்தி

அன்புள்ள வாடகைதாரர்களுக்கு,

சீனியர்ஸ் ஸ்பீக்கின் (Seniors Speak) 2026க்கான குளிர்காலப் பதிப்பிற்கு வரவேற்கிறோம்

நகரம் முழுவதும் உள்ள  ரொறன்ரோ சீனியர்ஸ் ஹவுசிங் (Toronto Seniors Housing) கட்டடங்களில் 45க்கும் மேற்பட்ட வாடகைதாரர் விருந்துகளில் குளிர்கால விடுமுறையைக் கொண்டாடியதன் மூலம் 2025ம் ஆண்டை நேர்மறையான விதத்தில் முடித்தோம். ஒவ்வொரு கட்டடத்திலும் உள்ள வாடகைதாரர் தன்னார்வலர்களின் கடின உழைப்பும் விரிவான திட்டமிடலும் இந்த அற்புதமான நிகழ்ச்சிகளை அனுபவிக்க எங்களுக்கு வாய்ப்பளித்தமைக்காக நான் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சீனியர்ஸ் ஸ்பீக்கின் இந்த இதழில், உரிமையாயிருத்தல் என்ற கருப்பொருளைச் சுற்றித் தங்கள் எண்ணங்களையும் வாழ்க்கைக் கதைகளையும் பகிர்ந்து கொள்ளும் சில வாடகைதாரர்களைச் சந்திக்கிறோம், அதில் அவர்கள் தங்கள் கட்டடத்தின் சமூகத்தில் எவ்வாறு பங்கேற்கிறார்கள், அது அவர்களுக்கு எவ்வாறு

அர்த்தமளிக்கிறது என்பதை உள்ளடக்குகிறது. எங்கள் செழிப்பான மற்றும் பன்முகத்தன்மை கொண்ட வாடகைதாரர் சமூகத்தைக் கொண்டாட, முக்கியத்துவம் வாய்ந்த நாட்களையும் ஆண்டின் இந்த நேரத்தில் நாங்கள் குறிக்கின்றோம்: ஏனையவற்றுக்கு மத்தியில் **கறுப்பின வரலாற்று மாதம்** (பெப்ரவரி), சீனப் **புத்தாண்டு** (பெப்ரவரி 17), மற்றும் **சர்வதேச மகளிர் தினம்** (மார்ச் 8). இந்த ஒவ்வொரு விழாவைப் பற்றியும் இந்த இதழில் நீங்கள் மேலும் படிக்கலாம்.

இறுதியாகக், கடந்த ஆண்டு இறுதியில் அனைத்து TSHC வாடகைதாரர்களுக்கும் தபால் மூலம் அனுப்பப்பட்ட எங்கள் இரண்டாவது **வாடகைதாரர் அனுபவக் கருத்துக்கணிப்பில்** பங்கேற்ற அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஊழியர்கள் கருத்துக்கணிப்பு முடிவுகளை மதிப்பாய்வு செய்கிறார்கள், மேலும் உங்களுக்கு மிகவும் முக்கியமானது என்று நீங்கள் எங்களிடம் கூறிய பகுதிகளில் TSHC கவனம் செலுத்த உதவும் வகையில் அத்தகவலைப் பயன்படுத்துவார்கள்.

அனைவருக்கும் பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான குளிர்கால வாழ்த்துகள்.

Tom Hunter

தலைமை நிர்வாக அதிகாரி

# மனிதகுலத்தில் அழகைக் காண்பது

Souria Chaaboவைப் பொறுத்தவரை புன்னகை என்பது ஒரு மந்திர சக்தி.

சிரியாவைப் பூர்வீகமாகக் கொண்ட Souria, லெபனான் மற்றும் சைப்ரஸில் நீண்ட காலம் கழித்ததால், உண்மையிலேயே உலகின் குடிமகள். பல தசாப்தங்களுக்கு முன்பு அவர் கனடாவுக்கு வந்தபோது, புன்னகையானது கலாச்சார வேறுபாடுகளைக் கடந்து தொடர்பு கொள்ளக்கூடியது என்பதை அவர் ஏற்கனவே அறிந்திருந்தார். இந்த சக்திதான் - மற்றவர்களுடன் இணையும் திறனாக Souria எங்கு சென்றாலும் சமூகத்தை உருவாக்க உதவியது.

கனடாவில் தனது ஆரம்ப நாட்களில், Souria ஒரு இலாப நோக்கற்ற டிராப்-இன் மையத்தில் பணிபுரிந்தார், பல்வேறு பின்னணிகளைச் சேர்ந்த மக்களுடன் பணியாற்றினார். அவர் தனது வாடிக்கையாளர்களின் கதைகளைக் கேட்பதன் மூலம் - உண்மையிலேயே கேட்பதன் மூலம் - மற்றும் அவர்களின் தேவைகளையும் கண்ணியத்தையும் மதிக்கும் ஆதரவை வழங்குவதன் மூலம் அவர்களின் நம்பிக்கையை வளர்த்துக் கொண்டார். அவருடைய முயற்சிகள் அவருக்கு "அம்மா" என்ற

செல்லப்பெயரைப் பெற்றுத் தந்தன, அந்த அன்பான சொல் பல வருடங்களாக அவரைப் பின்தொடரும்.



இப்போதெல்லாம், Souria தனது வடக்கு ரொறன்ரோ TSHC கட்டடத்திற்கு அந்த சக்திவாய்ந்த அரவணைப்பைக் கொண்டு வருகிறார். சில ஆண்டுகளுக்கு முன்பு TSHC வாடகைதாரர் தன்னார்வலர்களைத் தேடத் தொடங்கியபோது, அவரது கட்டிடத்தில் பங்கேற்ற ஒரேயொரு நபர் Souria மட்டுமே. ஒரு தன்னார்வலருடன் தொடங்கிய இது, ஒரு சிறிய ஆனால் அர்ப்பணிப்புள்ள வாடகைதாரர் வட்டமாக வளர்ந்துள்ளது.
தோட்டக்கலை முதல்  சமையல் திட்டமிடல் மற்றும் சுத்தம் செய்தல் வரை - ஒவ்வொருவரும் தங்கள் திறமைகளைக் குழுவிற்குக் கொண்டு வருகிறார்கள்.

கண்ணியமும் உள்ளடக்கமும் Souriaவின் தலைமைத்துவத்தின் மையமாக  உள்ளன. ஒரு சமூக நிகழ்ச்சி நடைபெறும் போதெல்லாம், நிகழ்ச்சி நடைபெறுவதற்கு முன்பு தங்கள் அலகுகளை விட்டு

வெளியேற முடியாத வாடகைதாரர்களுக்கு உணவு வழங்கப்படுவதை அவர் உறுதிசெய்கிறார் - "எஞ்சியவற்றைை அல்ல" என்று அவர் வலியுறுத்துகிறார்.

Souriaவின் பார்வை அவரது கட்டடத்திற்கு அப்பாற்பட்டது. SPRINT Seniors Care, CAMH, மற்றும் The Living Room Church போன்ற வெளிப்புற நிறுவனங்களுடன் கூட்டுச் சேருவதில் அவர் ஆர்வமாக உள்ளார். இந்தப் பங்காளர்கள் உடற்பயிற்சி, மனநலக் கல்வி, உணவு மற்றும் அர்த்தமுள்ள செயல்பாடுகளுக்கான வாய்ப்புகளை வழங்குகிறார்கள்.

ரொறன்ரோ முழுவதும் சில முதியோர் எதிர்கொள்ளும் போராட்டங்கள், டிமென்ஷியா, மனநலம் மற்றும் போதைப்பொருள் பயன்பாடு உள்ளிட்டவற்றையும் Souria உணர்ந்துகொள்கிறார். அவர் அரசியலில் ஈடுபாடு கொண்டவர் மற்றும் மூத்த குடிமக்கள் அங்கீகரிக்கப்பட்டு ஆதரிக்கப்பட வேண்டும் என்றும் வாதிடுகிறார்.

இவையனைத்தும் அந்தப் புன்னகையின் மந்திர சக்திக்குத் திரும்புகிறது. மற்றவர்கள் தங்கள் கதைகளையும் வாழ்க்கையையும் எந்த மதிப்பீடும் இல்லாமல் வசதியாகத் தன்னுடன் பகிர்ந்து கொள்ளக்கூடியதாக உள்ள Souriaவின் கொடை, கடந்த காலத்தில் தனக்குக் கஷ்டங்கள் இருந்தபோதிலும்,

வாழ்க்கையின் அழகில் நம்பிக்கை கொள்ள அவருக்கு உதவியுள்ளது.

"உலகம் மிகவும் அழகாக இருக்கிறது. மக்கள் அற்புதமானவர்கள், ”என்று அவர் கூறுகிறார். "அவர்களின் அழகை எவ்வாறு வெளியே கொண்டு வருவது என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்."

## Community Connect+ புதுப்பிப்பு

நகரம் முழுவதும் உள்ள TSHC கட்டடங்கள் பரபரப்பாக உள்ளன! கடந்த சில மாதங்களாக, வாடகைதாரர்கள் இலையுதிர் காலத்தின் நடுப்பகுதி விழா, நன்றி செலுத்தும் நாள் (Thanksgiving) மற்றும் குளிர்கால விடுமுறை நாட்களுக்கான கொண்டாட்டங்களை நடத்தியுள்ளனர். இலையுதிர்காலத்தில் நகர மண்டபங்கள் மற்றும் வருடாந்தக் கட்டடத் திட்டமிடல் கூட்டங்களிலும் வாடகைதாரர்கள் பங்கேற்றனர்.

## பிராந்திய வாடகைதாரர் தன்னார்வலர் கூட்டங்கள்

2025 ஆம் ஆண்டிற்கான எங்கள் இறுதிப் பிராந்திய வாடகைதாரர் தன்னார்வலர் கூட்டங்கள் டிசம்பரில் நடைபெற்றன. **பிரதிபலிப்பு மற்றும் அங்கீகாரம்** என்ற கருப்பொருளைக் கொண்ட இந்த நிகழ்ச்சிகளில் 119 வாடகைதாரர்கள், TSHC இன் வியக்கத்தக்க

வாடகைதாரர் தன்னார்வச் சமூகத்தின் அர்ப்பணிப்பு மற்றும் கடின உழைப்பில் கவனம் செலுத்திக் கலந்து கொண்டு கொண்டாடினர்.

நடன அரங்கம், DJ, மற்றும் குலுக்கல் சீட்டு - மற்றும் விடுமுறை உடையில் பலர் - என அனைவராலும் ஒரு சிறந்த நேரத்தைக் கழிக்க முடிந்தது!




## மூத்த வாடகைதாரர்கள் ஆலோசனைக் குழுப் (STAC) புதுப்பிப்பு

வாடகைதாரர்கள் தொடர்பான பல முக்கிய விடயங்களில் உள்ளீடுகளை வழங்குவதில் STAC மும்முரமாக ஈடுபட்டுள்ளது. ஒக்டோபரில், திறன்களை வளர்ப்பதன் மூலம் தன்னார்வச் சமூகத்தை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட TSHC இன் வாடகைதாரர் தன்னார்வலர் மேம்பாட்டுத் திட்டம்

பற்றிய விளக்கக்காட்சியை STAC செவிமடுத்தது. STAC உறுப்பினர்களின் கருத்துகள் திட்டத்தில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன, இது செயல்பாட்டில் உள்ளது. வாடகைதாரர் அனுபவக் கருத்துக்கணிப்பை நிரப்ப அதிக வாடகைதாரர்களை எவ்வாறு ஊக்குவிப்பது என்பது குறித்து TSHC ஊழியர்களால் STAC உடன் ஆலோசனை நடத்தப்பட்டது.

## Community in Colour (பன்னிறச் சமூகம்) வாடகைதாரர் கலை நாள்காட்டி

கடந்த இலையுதிர்காலத்தில், TSHC தொடர்பாடல் குழு, **"Community in Colour"** என்ற ஒரு முன்னோடித் திட்டத்தைத் தொடங்கியது - இது வாடகைதாரர்களின் கலைப் படைப்புகளைக் கொண்ட 2026 சுவர் நாள்காட்டியாகும். நாங்கள் விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான அழைப்பை விடுத்தோம், மேலும் நகரம் முழுவதும் உள்ள வாடகைதாரர்களால் 170க்கும் மேற்பட்ட கலைப் படைப்புகள் அனுப்பப்பட்டன! பல வாடகைதாரர்கள் தங்கள் திறமையையும் படைப்பாற்றலையும் எங்களுடன் பகிர்ந்து கொண்டதில் நாங்கள் பெருமைப்படுகிறோம்.

ஓவியங்கள், போர்வைகள், மணி வேலைப்பாடுகள், காகித வெட்டுக்கள் மற்றும் பலவற்றை உள்ளடக்கிய பன்னிரண்டு அழகான கலைப்படைப்புகள் நாள்காட்டிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டன.

கிடைக்கக்கூடியதாக இருக்கும் வரை வாடகைதாரர்களுக்கு நாள்காட்டிகள் கிடைக்கும், மேலும் அவை டிசம்பர் மற்றும் ஜனவரி மாதங்களில் கட்டடங்களுக்கு விநியோகிக்கப்பட்டன. உங்களுக்குக் நாள்காட்டி கிடைக்காவிட்டால், நீங்கள் அதைப் பெற விரும்பினால், தயவுசெய்து உங்கள் கோரிக்கையை Communities@TorontoSeniorsHousing.ca-க்கு மின்னஞ்சலில் அனுப்பவும் அல்லது **உங்கள் மூத்தோர் சேவைகள் ஒருங்கிணைப்பாளரைத் (SSC) தொடர்புகொள்ளவும்**.

## தொலைதூரத்தில் பிரமாண்டமாக வாழ்ந்த ஒரு வாழ்க்கை

மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக, John Anderson தனது ரொறன்ரோ சீனியர்ஸ் ஹவுசிங் கட்டடத்தை வீடாகக் கொண்டிருக்கிறார். ஆனால் Johnஇன் வாழ்க்கைப் பாதை அவரை உலகம் முழுவதும் மற்றும் பல தனிப்பட்ட அத்தியாயங்கள் வழியாக வெகுதூரம் அழைத்துச் சென்றுள்ளது.

Johnஇன் பயணம் வடக்கு கியூபெக்கில் தொடங்கியது, அவர் அங்கு பிறந்து எட்டு வயதில் ரொறன்ரோவிற்கு இடம்பெயர்ந்தார். பதின்ம வயதினராக இருந்தபோது தனது தாயை இழந்து சோகத்தின் பின்பு, John தனது குடும்பத்தை விட்டு வெளியேறி, ஆத்ம-தேடலுக்காகப்,

பத்து ஆண்டுகளுக்கும் மேலாக உலகம் முழுவதும் பயணம் செய்தார்.

1980களின் நடுப்பகுதியில் John, ரொறன்ரோவுக்குத் திரும்பி நகரின் ஆடை அலங்காரத் துறையில் நிலையான வேலையைக் கண்டுபிடித்தார், பொத்தான் உற்பத்தியாளரான Sterling Buttonsஇல் சாயத் தொழில்நுட்ப வல்லுநராக 20 ஆண்டுகள் பணியாற்றினார். பின்னர் அவர் Seneca கல்லூரியில் மீண்டும் பயிற்சி பெற்று, 2008 நிதி நெருக்கடி அவரை மீண்டும் செயல்படுத்தக் கட்டாயப்படுத்தும் வரை வாகன உதிரிப்பாகங்கள் உற்பத்தியாளரான Magnaவில் பணிபுரிந்தார். ரொறன்ரோப் பிராந்தியப் பாடசாலைச் சபைக்காக பள்ளிப் பேருந்துகளை ஓட்டுவதுதான் அவருக்குப் பிடித்தமான பாத்திரம் என்று அவர் சிரித்துக் கொண்டே நினைவு கூர்ந்தார். குழந்தைகளுடன், குறிப்பாக சிறப்புத் தேவைகள் உள்ளவர்களுடன் பணிபுரிவது சவாலானது மற்றும் மிகவும் பலனளிப்பதாக இருந்தது.



வாழ்க்கையும் கஷ்டங்களைக் கொண்டு வந்தது: ஒரு பக்கவாதம் Johnன் பேருந்து ஓட்டுநர் வாழ்க்கையை முடிவுக்குக் கொண்டு வந்தது, மேலும் அவர் தனது மகனின் மரணம் உட்படத் தனிப்பட்ட இழப்புகளைச் சந்தித்தார். ஆயினும்கூட John தனது பேரனுடன் தொடர்பில் இருக்கிறார் மற்றும் புகைப்படம் எடுப்பதில் மகிழ்ச்சியைக் காண்கிறார், இது வாழ்நாள் முழுவதும் அவருக்கு இருந்த ஆர்வமாகும், இது Humber River-Black Creek பாளுமன்ற உறுப்பினர் Judy Sgroவின் முன்னாள் அதிகார்பூர்வப் புகைப்படக் கலைஞராகவும், கூகிள் மேப்ஸில் 68 மில்லியனுக்கும்

அதிகமான பார்வைகளைப் பெற்றதாகவும் அவருக்கு அங்கீகாரத்தைப் பெற்றுத் தந்தது.

சமீபத்திய ஆண்டுகளில், John தனது ஆற்றலை தன்னார்வத் தொண்டு நோக்கித் திருப்பி வருகிறார். அவரது கட்டடம் ரொறன்ரோ சமூக வீட்டுவசதியிலிருந்து ரொறன்ரோ மூத்தோர் வீட்டுவசதிக்கு மாறியபோது, அவர் தனது சமூகத்திற்கான சமூக நிகழ்ச்சிகளை ஒழுங்கமைக்க உதவுவதற்காக ஒரு வாடகைதாரர் தன்னார்வலராக முன்வந்தார்.

கோடைகால பார்பிக்யூக்கள் முதல் புதிய மாதாந்தக் காபி கிளப் வரை, John இந்த நிகழ்ச்சிகளை சமூக தனிமைப்படுத்தலை எதிர்த்துப் போராட உதவும் வழிகளாகப் பார்க்கிறார். "மக்கள் ஓய்வெடுக்கவும், தங்கள் அலகுகளை விட்டு வெளியேறவும், வித்தியாசமாக ஏதாவது செய்யவும் அவை ஒரு வாய்ப்பாகும்," என்று அவர் கூறுகிறார், இந்த முயற்சிகள் இதுவரை நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளன.

“தன்னார்வத் தொண்டு என்பது பள்ளிப் பேருந்தை ஓட்டுவது போன்றது. "சவால்கள் இருக்கலாம், ஆனால் அதற்காகத்தான் நீங்கள் முன்வந்தீர்கள்," என்று அவர் சிரிக்கிறார். "நாங்கள் விரும்புவதாலும், மக்கள் அனுபவிக்க ஒரு நேர்மறையான அனுபவத்தைப் பெற

வேண்டும் என்பதாலும் நாங்கள் தன்னார்வத் தொண்டு செய்கிறோம்."

Johnஇன் கடின உழைப்பு நிச்சயமாக நேர்மறையான அனுபவங்களை உருவாக்குகிறது - ஒரு நேரத்தில் ஒரு காபிச் சந்திப்பு.

## ரொறன்ரோ பொது சுகாதாரத்துடனான ஆரோக்கியமான உணவுப் பட்டறைகளை வாடகைதாரர்கள் அனுபவிக்கிறார்கள்.

ரொறன்ரோ சீனியர்ஸ் ஹவுசிங் கார்ப்பரேஷன் (TSHC), பயனுள்ள சேவைகள் மற்றும் ஆதரவை வாடகைதாரர்கள் அணுகுவதற்காகப் பரந்த சமூகத்தில் உள்ள பல நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுகிறது. **ரொறன்ரோப் பொது சுகாதாரம்** இந்த சமூகக் கூட்டாளர்களில் ஒன்று.

ரொறன்ரோப் பொது சுகாதாரம், TSHC மற்றும் மூத்தோர் சேவைகள்  மற்றும் நீண்ட காலப் பராமரிப்பகம் (SSLTC) ஆகியவற்றுடன் இணைந்து, சமீபத்தில் ***ஆரோக்கியமான உணவு, ஆரோக்கியமான முதுமை*** என்ற முன்னோடி ஊட்டச்சத்துக் கல்வித் திட்டத்தை நடத்தியது. இந்தத் திட்டம் ரொறன்ரோ நகரத்திற்கு மூத்த குடிமக்களின் நல்வாழ்வை மேம்படுத்துவதற்கான அதன் இலக்கில் உதவுகிறது,

அத்துடன் வாடகைதாரர்கள் அறிய ஆர்வமாக இருப்பதாகக் கூறும் தகவல்களை வழங்குகிறது.

கடந்த கோடையில், ரொறன்ரோப் பொது சுகாதாரம், எந்த வகையான திட்டங்கள் உதவிகரமாகவும் சுவாரஸ்யமாகவும் இருக்கும் என்பதை நன்கு புரிந்துகொள்ள TSHC வாடகைதாரர்களின் குழுக்களை அவர்களின் கட்டடங்களில் சந்தித்தது. வாடகைதாரர்களின் கருத்துக்களைப் பயன்படுத்தி, ரொறன்ரோப் பொது சுகாதாரம் கனடாவின் உணவு வழிகாட்டி, வரவுசெலவுத் திட்டத்தில் ஆரோக்கியமான உணவு மற்றும் உணவு பெயர்ப்பட்டிகளைப் (labels) புரிந்துகொள்வது உள்ளிட்ட **கல்விப் பட்டறைகளை** உருவாக்கியது.

பட்டறைகள் முடிந்தவரை பல வாடகைதாரர்களுக்கு அணுகக்கூடியதாக இருப்பதை உறுதி செய்வது முக்கியமானதாக இருந்தது. TSHC சமூகங்களின் பன்முகத்தன்மையைப் பிரதிபலிக்கும் வகையில், அமர்வுகள் ஆங்கிலம், கான்டோனீஸ், மாண்டரின், ரஷ்யன், ஃபார்ஸி, வியட்நாமிய மற்றும் ஸ்பானிஷ் உள்ளிட்ட **பல மொழிகளில்** நடத்தப்பட்டன. பொது சுகாதார உணவியல் நிபுணர்கள் மற்றும் சமூக ஊட்டச்சத்துக் கல்வியாளர்களால் பட்டறைகள் வழிநடத்தப்பட்டன, அவர்களில் பலர் வாடகைதாரர்களின் முதன்மை மொழிகளில் சரளமாகப் பேசக்கூடியவர்கள். இது வாடகைதாரர்

பங்கேற்பாளர்கள் சௌகரியமாகவும் புரிந்துகொள்ளவும் உணர உதவியது.

இந்தத் திட்டம் செப்டம்பர் 2025 இல் தொடங்கப்பட்டது மற்றும் இதுவரை பல கட்டடங்களில் 18 பட்டறைகளை நடத்தியுள்ளது, இன்றுவரை 265 வாடகைதாரர்கள் பங்கேற்றுள்ளனர். வாடகைதாரர்களின் கருத்து மிகவும் நேர்மறையானதாக உள்ளது, மக்கள் புதிய தகவல்களைக் கற்றுக்கொண்டதாகவும், அன்றாட வாழ்வில் கற்றுக்கொண்ட ஆரோக்கியமான உணவுக் குறிப்புகளைப் பயன்படுத்த உந்துதல் பெற்றதாகவும் தெரிவிக்கின்றனர்.

ரொறன்ரோப் பொது சுகாதாரம், மூத்தோர் சேவைகள் மற்றும் நீண்டகாலப் பராமரிப்பு மற்றும் பட்டறைகளில் பங்கேற்றுத் தங்கள் கருத்துக்களை வழங்கிய அனைத்து வாடகைதாரர்களுக்கும் நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம்.

# உங்கள் சமூகம் பற்றிய ஒரு பார்வை



**Toronto Seniors Housing Corporation**



# சமூக வாழ்க்கை: உடலுக்கும் உள்ளத்திற்கும் நல்லது

வடகிழக்கு ரொறன்ரோவில், ஒரு TSHC கட்டடம் உள்ளது, அதை வாடகைதாரர்கள் அமைதியானதாகவும் நிம்மதியானதாகவும் விவரிக்கிறார்கள். ஆனால் அந்த அமைதியின் கீழ், செயல்பாடும் தொடர்பும் நிறைந்த ஒரு பரபரப்பான சமூகம் உள்ளது.

ஒரு வருடத்திற்கு முன்புதான் இந்தக் கட்டடத்திற்குக் குடிபெயர்ந்த Marrita Abunda, தனது அண்டை வீட்டாரின் நட்பைப் பார்த்து உடனடியாக ஈர்க்கப்பட்டதாகக் கூறுகிறார். இங்கு 20 வருடங்களாக வசித்து வரும் Parameswary Kanapathipillai யும், தனது மனைவி Janetடுடன் ஒன்பது வருடங்களாக இங்கு வசித்து வரும் Donald Rego வும் இதை ஒப்புக்கொள்கிறார்கள். "மக்கள் மிகவும் நல்லவர்கள்," என்கிறார் Parameswary. "நான் இங்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறேன்."

இந்த நட்புறவுதான் வாடகைதாரர்கள் சமூக மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கைகள் மூலம் உறவுகளை உருவாக்க அனுமதிக்கிறது. இந்தக் கட்டடத்தின் பொதுத் தோட்டம் ஒரு உண்மையான மையமாகும், மக்கள் தொடர்புகொண்டு உதவிக்குறிப்புகளைப் பரிமாறிக்கொள்ளும் இடமாகும். கடந்த கோடையில் தனது தோட்டத் திட்டத்தைத் தொடங்க உதவுவதற்காக அண்டை வீட்டார் தங்கள் காய்கறிகளையும்

பூக்களையும் தாராளமாகப் பகிர்ந்து கொண்டதாக Marrita விவரிக்கிறார்.

சமூகப் பங்காளர் அமைப்பால் நடத்தப்படும் கட்டடத்தின் உடற்பயிற்சி வகுப்பு, Donald மற்றும் Parameswaryக்கு வாரத்திற்கு மூன்று முறை ஒரு சிறப்பம்சமாக மாறியுள்ளது. இந்த வகுப்பு பாதுகாப்பான இயக்கம், சமநிலை மற்றும் விழுவதைத் தடுப்பது ஆகியவற்றைக் கற்பிக்கிறது. பங்கேற்பாளர்கள் புத்துணர்ச்சியை உணர்கிறார்கள், மேலும் இந்த அமர்வுகள் தூக்கத்தையும் அன்றாட இயக்கத்தையும் மேம்படுத்த உதவுகின்றன என்று Parameswary கூறுகிறார். உடற்தகுதிக்கு அப்பால், இந்த வகுப்பு வாடகைதாரர்கள் பழகுவதற்கான வாய்ப்பை வழங்குகிறது என்று அவர் கூறுகிறார்.



இந்தக் கட்டிடம் பெருமையுடன் பன்முகக் கலாச்சாரத்தைக் கொண்டுள்ளது. "எல்லோரும் ஒன்றாக இருக்கிறார்கள்" என்று Marrita விவரிக்கிறார், சில சமயங்களில் மொழித் தடைகளைத் தாண்டியும் தொடர்பு கொள்கிறார். வாடகைதாரர்களின் ஒரு குழு வாரந்தோறும் தாய் சி பயிற்சி செய்கிறது, மற்றவர்கள் தெற்காசியாவில் பிரபலமான பலகை விளையாட்டான மஹ்-ஜோங், டோமினோஸ் அல்லது கேரம் விளையாட ஒன்றுகூடுகிறார்கள். மக்கள் தங்கள் அண்டை வீட்டாருடன் கட்டடத்தின் வாராந்தச் சுகாதார கிளினிக்கிலோ அல்லது அஞ்சல் பெட்டிகளின் அருகிலோ அரட்டை அடிப்பதில் மகிழ்ச்சி அடைகிறார்கள்.

அவர்களது குடும்பங்களில் சிலர் ஒன்ராறியோவின் பிற பகுதிகளில் வாழ்ந்தாலும், வாடகைதாரர்கள் அவர்களைத் தாங்கள் பிரிந்திருப்பதாக நினைப்பதில்லை என்று கூறுகிறார்கள். இந்தக் கட்டடத்தின் வரவேற்கத்தக்க அயலவர்களும் ஆதரவான ஊழியர்களும் வாழ்க்கையை நிறைவானதாக ஆக்குகிறார்கள். "நாங்கள் இங்கே வசதியாக இருக்கிறோம்," என்கிறார் Donald. "எங்களுக்கு மன அமைதி இருக்கிறது."

"நான் சமூகத்தை நேசிக்கிறேன்," என்று Marrita கூறுகிறார். "இந்த கட்டடத்திற்காக நான் நன்றியுள்ளவராகவும் பெருமையுடனும் இருக்கிறேன்."

## R-PATH அறிக்கைகள்: மூத்த குடிமக்களுக்கான நீட்டிக்கப்பட்ட மருத்துவ சலுகைகள்

உடல்நலம் மற்றும் இயக்கம் தொடர்பான செலவுகளுக்கு நீட்டிக்கப்பட்ட மருத்துவ நிதிக்கு நீங்கள் தகுதி பெறலாம் என்பது உங்களுக்குத் தெரியுமா?

CPP, OAS அல்லது உத்தரவாத வருமான துணைத் தொகையைப் பெறுபவர்கள் **ஒன்ராறியோ ஊனமுற்றோர் ஆதரவுத் திட்டத்திலிருந்து (ODSP) நீட்டிக்கப்பட்ட சுகாதார நலன்களுக்கு (EHB)** தகுதி பெறலாம். இது ODSP ஒழுங்குமுறை (பொது) பிரிவு 44 மற்றும் 45 இல் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது.

இந்த நன்மை உங்களுக்குத் தேவையான பொருள்கள் மற்றும் உபகரணங்களை வாங்க உதவும், அவற்றுள்:

- பரிந்துரைக்கப்படும் மருந்துகள்
- அடிப்படைப் பல் சுகாதாரம்
- பார்வைப் பராமரிப்பு, வழக்கமான கண் பரிசோதனைகள், செவிப்புலன் கருவிகள்
- மருத்துவப் பொருட்கள் (நீரிழிவு, காயக்கட்டுகள் அல்லது வயதானவருக்கான டயப்பர்கள் போன்றவை)
- மருத்துவச் சந்திப்புகளுக்கான போக்குவரத்து
- Assistive Devices Program (ADP) ஒரு இயக்க உதவி சாதனத்தின் செலவின் 75% வழங்கும்

சந்தர்ப்பங்களில், மீதமுள்ள 25% செலவு வழங்கப்படும்.

- ADP நிதிக்கு விண்ணப்பிக்க உங்களுக்குத் தேவையான மதிப்பீடு
- இயக்க சாதனங்களுக்கான பழுதுபார்ப்புகள் மற்றும் மின்கலங்கள்

இந்தத் திட்டம் மற்றும் விண்ணப்பிப்பது எப்படி என்பது பற்றி மேலும் அறிய, உங்கள் உள்ளூர் ODSP அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும். **416-326-3344 (TTY: 416-326-2914)** அழைப்பதன் மூலம் அல்லது இணையத்தில் **OfficeLocator.mcss.gov.on.ca**உங்கள் பகுதியில் உள்ள அலுவலகத்தைக் கண்டறியலாம்.

## உங்களுக்கான அணுகல்தன்மை (Accessibility Is For You) தொகுப்பு

ஒரு இயலாமை அல்லது மருத்துவத் தேவை காரணமாக உங்கள் வீட்டில் செயல்படுவதில் சிரமப்படுகிறீர்களா? உங்கள் அலகை மாற்றியமைப்பதற்கு நீங்கள் தகுதி பெறலாம்.

மேலும் அறிய, அணுகல்தன்மை உங்களுக்கானது என்ற தொகுப்பின் ஒரு பிரதியை எடுத்துக் கொள்ளுங்கள். ரொறன்ரோ சீனியர்ஸ் ஹவுசிங்கில் உள்ள வாடகைதாரர்களுக்கான அணுகல் திட்டம் பற்றி R-PATH குழுவால் எழுதப்பட்ட வழிகாட்டி இது.

உங்கள் அலகை எவ்வாறு மாற்றியமைப்பது என்பது குறித்த படிப்படியான வழிகாட்டியை இந்தத் தொகுப்பு உங்களுக்கு வழங்குகிறது. செயல்முறையின் போது என்ன எதிர்பார்க்க வேண்டும் என்பதை இது உங்களுக்குச் சொல்கிறது மற்றும் இந்தச் செயல்முறை குறித்து வாடகைதாரர்கள் கேட்கும் ஏழு (7) பொதுவான கேள்விகளுக்கும் பதிலளிக்கிறது.

உங்கள் கட்டிடத்தின் மூத்தோர் சேவைகள் ஒருங்கிணைப்பாளரிடமிருந்து (SSC) அணுகல் உங்களுக்கானது என்ற தொகுப்பை நீங்கள் பெறலாம் அல்லது எங்கள் வலைத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாம். [TorontoSeniorsHousing.ca/Accessibility-Program/](TorontoSeniorsHousing.ca/Accessibility-Program/)

## வரித் தாக்கல்: அது ஏன் முக்கியம்?

வசந்த காலம் வருகிறது, அது வரி செலுத்தும் காலத்தையும் குறிக்கின்றது. உங்கள் வரிகளைத் தாக்கல் செய்வதற்கான கடைசித் திகதி ஒவ்வொரு ஆண்டும் **ஏப்ரல் 30** ஆகும்.

ஒவ்வொரு ஆண்டும் உங்கள் வரிகளைத் (Taxes) தாக்கல் செய்வது முக்கியமானது; இதனால் நீங்கள் பெறும் நலன்கள் மற்றும் வரிச்சலுகைகளைத் தொடர்ச்சியாகப் பெறலாம், உங்கள் மன அமைதியையும் பாதுகாக்கலாம், மேலும் பல நன்மைகளையும் பெறலாம். கருத்தில் கொள்ள வேண்டிய சில முக்கியமான விடயங்கள் இங்கே.

## உங்கள் வருமானத்துக்கு ஏற்ற வாடகையைப் பராமரித்தல்.

உங்கள் குடியிருப்புக்கான வாடகையானது, வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு நிர்ணயிக்கப்படும் (RGI) வகையாக இருந்தால், நீங்கள் ஒவ்வொரு ஆண்டும் உங்கள் வரிகளைத் தாக்கல் செய்ய வேண்டும். உங்கள் குடும்பத்தின் வருடாந்த வருமான விவரங்களையும் RGI மறுஆய்வுப் படிவத்தையும் சமர்ப்பிக்கும் போது 'Notice of Assessment' ஐயும் சேர்க்கலாம்.

## நன்மைகளுக்கான அணுகலைத் தக்கவைத்துக் கொள்ளல்

உங்கள் வரிகளைத் தாக்கல் செய்யும்போது, நீங்கள் வரிச் சலுகைகள் மற்றும் நன்மைகளுக்குத் தகுதியுடையவராக இருக்கலாம். முதியோர் பாதுகாப்பு (OAS), உத்தரவாத வருமானத் துணைத் திட்டம் (GIS), ஊனமுற்றோர் வரிக் கடன் மற்றும் கனடியப் பல் பராமரிப்புத் திட்டம் போன்ற பல அரசுத் திட்டங்களுக்கு, புதுப்பித்த வரித் தகவல்கள் தேவைப்படுகின்றன. உங்கள் வரிகளைத் தாக்கல் செய்வது, இந்த உதவிகளை (நீங்கள் தகுதியுடையவராக இருந்தால்) எந்த இடையூறும் இல்லாமல் தொடர்ந்து பெற உங்களை அனுமதிக்கிறது.

## சொத்து வரி நிலை குறித்த குறிப்பு

உங்கள் கட்டடத்தின் சொத்து வரி நிலை உங்களுடைய தகுதியுள்ள பலன்களைப் பாதிக்கலாம் அல்லது உங்கள் வரிகளை எவ்வாறு தாக்கல் செய்கிறீர்கள் என்பதைத் தெரிவிக்கலாம். தற்போது, சொத்து வரி செலுத்த வேண்டிய TSHC வாடகைதாரர்களைக் கொண்ட ஒரே கட்டடம் 650 Lawrence Avenue West ஆகும்.

## உங்கள் மன அமைதியைப் பாதுகாத்துக் கொள்ளல்

தொடர்ந்து வரிகளைத் தாக்கல் செய்வது சாத்தியமான அபராதங்களையும் அல்லது எதிர்பாராத மன அழுத்தங்களையும் தடுக்கிறது. கவலைப்பட வேண்டிய விடயங்களின் இது ஒன்றைக் குறைக்கின்றது.

ஒவ்வொரு ஆண்டும் வரித் தாக்கல் செய்வது மோசடிக்கான வாய்ப்பைக் குறைக்கிறது. ஒரு புதுப்பித்த வரிப் பதிவு, உங்கள் பெயரில் நன்மைகளைப் பெறுவதற்கு வேறு யாராவது உங்கள் அடையாளத்தைத் தவறாகப் பயன்படுத்துவதைக் கடினமாக்கும்.

## இலவச உதவி கிடைக்கிறது!

தங்கள் வரிகளைத் தாக்கல் செய்வதற்கு முன் வாடகைதாரர்கள் ஒரு வரி நிபுணரைச் சந்திக்குமாறு நாங்கள் பரிந்துரைக்கிறோம்.

ரொறன்ரோவில் உள்ள பல சமூக அமைப்புகளும் தன்னார்வ வரி முகாம்களும் மூத்த குடிமக்களுக்கு இலவச உதவியை வழங்குகின்றன. இலவச வரி

முகாம்கள் பற்றிய தகவல்களை **TorontoSeniorsHousing.ca/TaxInfo/** இல் காணலாம்.

இந்த ஆண்டு எங்கள் சில கட்டடங்களில் TSHC மீண்டும் வரி முகாம்களை நடத்தும். மேலும் தகவல்களுக்குத் தயவுசெய்து உங்கள் கட்டிடத்தில் ஒட்டப்பட்டுள்ள அறிவிப்புச் சுவரொட்டியைக் கவனிக்கவும், அல்லது சந்திப்பு நேரத்தை ஒழுங்கு செய்து  முன்பதிவு செய்ய உதவ உங்கள் மூத்தோர் சேவை ஒருங்கிணைப்பாளரை (SSC) தொடர்பு கொள்ளவும்.

## மோசடியிலிருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்ளல்

மக்களைக் குறிவைப்பதில் மோசடி செய்பவர்கள் மேலும் மேலும்  திறமை பெற்று வருகின்றனர். உங்களை எவ்வாறு பாதுகாத்துக் கொள்வது என்பதை அறிவது எப்போதையும் விட முக்கியமானது.



ஏமாற்றுவோர் (Scammers), உங்கள் தனிப்பட்ட அல்லது நிதி தொடர்பான தகவல்களைப் பெறுவதற்காக வேறு ஒருவராக நடித்து அணுகலாம். சிலர் கனடிய வருமானத் துறை நிறுவனம் (CRA), சர்வீஸ் கனடா, உங்கள் வங்கி அல்லது ரொறன்ரோ சீனியர்ஸ் ஹவுசிங் போன்ற நம்பகமான அமைப்பைச் சேர்ந்தவர்கள் போலவும் நடிப்பார்கள்.

**மோசடி பல வடிவங்களில் வரலாம், எடுத்துக்காட்டாக:**

- தொலைபேசி அழைப்புகள் அல்லது குறுஞ்செய்திகள்
- சமூக ஊடகங்களில் மின்னஞ்சல் அல்லது செய்திகள்
- தபாலில் வரும் கடிதங்கள்
- நேரில்

**மோசடிகளில் இருந்து பாதுகாப்பாக இருப்பதற்கான உதவிக்குறிப்புகள்:**

- தனிப்பட்ட அடையாள எண்கள் (PINகள்) மற்றும் கடவுச்சொற்கள் உட்பட **உங்கள் தனிப்பட்ட அல்லது நிதித் தகவல்களை ஒருபோதும் பகிர வேண்டாம்** .
- நீங்கள் நம்பக்கூடிய நிறுவனம் அல்லது வணிகத்துடன் இணைக்கப்பட்ட எண்ணை அழைப்பதன் மூலம் **அழைப்பாளரின் அடையாளத்தைச் சரிபார்க்கவும்** .
- **அவசர கோரிக்கைகளுக்கு எதிர்வினையாற்றும்போது கவனமாக இருங்கள்** . மோசடி செய்பவர்கள் உங்களைப் பீதியடையச் செய்து ஆபத்தான முடிவுகளை எடுப்பதற்கு அவசரப்பட வைக்கும் வழிகளில் இதுவும் ஒன்றாகும்.
- **உங்கள் கணினி அல்லது மொபைல் சாதனத்திற்கான அணுகலை** வழங்குவதற்கான கோரிக்கைகள் குறித்து எச்சரிக்கையாக இருங்கள்.

நீங்கள் ஒரு குற்றத்தால் பாதிக்கப்பட்டிருந்தால், **AntiFraudCentre-CentreAntiFraude.ca** இல் உள்ள கனடிய மோசடி எதிர்ப்பு மையத்தில்  முறையிடவும்.

# முக்கியத்துவம் வாய்ந்த நாட்களைக் கொண்டாடுதல்

ரொறன்ரோ சீனியர்ஸ் ஹவுசிங்கில், எங்கள் சமூகத்தின் பன்முகத்தன்மையை நாங்கள் மதிக்கிறோம். ஒவ்வொரு ஆண்டும், நமது பகிரப்பட்ட வரலாறு மற்றும் மரபுகளை நினைவூட்டும் சிறப்புத் திகதிகளை நாங்கள் கொண்டாடுகிறோம்.

**கறுப்பின வரலாற்று மாதம் (பெப்ரவரி)**
உலகெங்கிலும் உள்ள கறுப்பினக் கனடியர்கள் மற்றும் சமூகங்களின் வலிமை மற்றும் சாதனைகளை அங்கீகரிக்கிறது. இது நம்மைக் கடந்த காலத்திலிருந்து கற்றுக்கொள்ளவும், பண்பாட்டுப் பங்களிப்புகளைக் கொண்டாடவும், மேலும் அனைவரையும் உள்ளடக்கிய சமமான சமூகத்தைத் தொடர்ந்து உருவாக்கவும் அழைக்கிறது.

**சீனப் புத்தாண்டு (பெப்ரவரி 17)** மகிழ்ச்சி, குடும்பக் கூட்டங்கள் மற்றும் உணவைப் பகிர்ந்து கொள்வது மற்றும் நல்வாழ்த்துகளைப் பரிமாறிக் கொள்வது போன்ற மரபுகளைக் கொண்டுவருகிறது. சீன, கொரிய மற்றும் வியட்நாமியக் கலாச்சாரங்களில் கொண்டாடப்படும் இந்த விடுமுறை, ஆரோக்கியம், மகிழ்ச்சி மற்றும் செழிப்பை வரவேற்கிறது.

**சர்வதேச மகளிர் தினம் (மார்ச் 8)** பெண்களின் சாதனைகளையும் சமத்துவத்தை நோக்கிய

தொடர்ச்சியான பயணத்தையும் கொண்டாடுகிறது. நமக்கு உத்வேகம் அளித்து, எதிர்காலச் சந்ததியினரை ஊக்குவிக்கும் பெண்களைக் கௌரவிக்க இது ஒரு வாய்ப்பு.

இந்த நாட்கள் அனைத்தும் சேர்ந்து, மரியாதை, கற்றல் மற்றும் கொண்டாட்டத்தை வலியுறுத்துகின்றன — இவை எங்கள் சமூகத்தை வலிமையாக வைத்திருக்கும் மதிப்புகளாகும்.

**உங்களுக்குத் தெரியுமா?**

- முதல் **சர்வதேச மகளிர் தினம்** 1911 ஆம் ஆண்டு கொண்டாடப்பட்டது.
- இனப் பிரிவினையை எதிர்த்துப் போராடியதற்காகக், கறுப்பினக் கனடியத் தொழிலதிபர் **வயோலா டெஸ்மண்ட்** கனடாவின் $10 பணத்தாளில் இடம்பெற்றுள்ளார்.
- ஒவ்வொரு **சீனப் புத்தாண்டும்** சீன ராசியில் ஒரு விலங்குடன் இணைக்கப்பட்டுள்ளது. 2026 **குதிரையின் ஆண்டு ஆகும்**.

## நிறுவனப் புதுப்பிப்புகள்

### வலைத்தளப் புதுப்பிப்புகள்

வாடகைதாரர் ஆலோசனைகளில் பெறப்பட்ட கருத்துகளையும், Toronto Housing-இன் Responsible Personal

Accessibility (R-PATH) குழுவின் பரிந்துரைகளையும் அடிப்படையாகக் கொண்டு, அணுகல்திறனையும் பயன்படுத்தும் எளிமையையும் மேம்படுத்துவதற்காக TSHC தனது இணையத்தளத்தைப் புதுப்பித்து வருகிறது. சில புதுப்பிப்புகளில் பின்வருவன அடங்கும்:

- மேம்படுத்தப்பட்ட **தேடல் செயல்பாடு** மற்றும் எளிமைப்படுத்தப்பட்ட **பட்டியல் (Menu)** மூலம் தகவல்களை எளிதாகக் கண்டுபிடிக்கலாம்.
- கட்டட அறிவிப்புச் சுவரொட்டிகளை ்இணையத்தில் பார்க்கப் புதிய ‘**அறிவிப்பு பலகை’ (Bulletin Board) பக்கம்** சேர்க்கப்பட்டுள்ளது.
- மேலும் பல மொழிகளில் தகவல்கள் தெளிவாகக் கிடைப்பதற்கு உதவ, மேம்படுத்தப்பட்ட மொழிபெயர்ப்பு வசதிகள் சேர்க்கப்பட்டுள்ளன.
- எங்கள் அற்புதமான வாடகைதாரர்கள் மற்றும் உயிரோட்டமான சமூகங்களின் கதைகளைச் சிறப்பாகப் பகிர்வதற்காக, மேலும் பல வாடகையாளர்களின் புகைப்படங்கள் சேர்க்கப்படுகின்றன.

## வருடாந்த நிதித் திட்டம்

கடந்த கோடைக்காலத்தில் நடைபெற்ற வருடாந்த நிதித்திட்ட ஆலோசனை அமர்வுகளின் போது, TSHC-இன் 2026 வரைவு நிதித்திட்டத்திற்கு தங்கள் கருத்துகளைப்

பகிர்ந்த அனைத்து வாடகைதாரர்களுக்கும் நன்றி. TSHC நிதித்திட்டம் பெப்ரவரி மாதத்தின் நடுப்பகுதியில் நகர சபையால் (City Council) பரிசீலிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கவுன்சில் கூட்ட அட்டவணைகள், நிகழ்ச்சி நிரல்கள் மற்றும் நேரடியாகப் பார்ப்பதற்கான இணைப்பை **Toronto.ca/City-Government/Council/Council-Committee-Meetings/** இல் காணலாம்.

## மொழிபெயர்ப்பு மற்றும் விளக்கக் கொள்கை

TSHC ஆவணங்கள், கூட்டங்கள் மற்றும் ஆலோசனைகளை எளிதாக அணுகுவதற்காக, வாடகையாளர்கள் மொழிபெயர்ப்பு அல்லது மொழி விளக்கச் (interpretation) சேவைகளைக் கோரலாம் என்பதை நீங்கள் அறிந்திருக்கிறீர்களா? இதில் சைகை மொழி (Sign Language) மற்றும் பிரெயில் (Braille) சேவைகளுக்கான கோரிக்கைகளும் அடங்கும்.

TSHC-இன் மொழிபெயர்ப்பு மற்றும் மொழி விளக்கக் கொள்கை கடந்த ஆண்டு புதுப்பிக்கப்பட்டது; மேலும், வாடகைதார்கள் கோரிக்கைகளை எளிதாகச் செய்யப் புதிய நடைமுறைகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும் அறிய அல்லது ஒரு சேவையைக் கோரத் தயவுசெய்து, உங்கள் **மூத்தோர் சேவைகள் ஒருங்கிணைப்பாளரிடம் (SSC)** பேசவும் அல்லது **416-**

**Toronto Seniors Housing Corporation**

**945-0800** என்ற எண்ணில் **வாடகைதாரர் ஆதரவு மையத்தை** அழைக்கவும்.

